1981 ஏப்ரல் 27]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது ஆதரைஸ்ட் அக்காமடேஷன் என்ற அடிப்படையில், பவானியில் 14-ம், தாராபுரத்தில் 26-ம், ஈரோட்டில் 35-ம், கோபியில் 24-ம், பெருந்துறையில் 8-ம், சத்தியமங்கலத்தில் 17-ம் என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. தற்போது ஈரோட்டில் இருக்கின்ற சப்-ஜெயிலை பொறுத்தவரைக்கும், அதை ஸ்பெஷல் சப்-ஜெயிலாக மாற்றி, ஆங்கு 35 பேர்கள் என்றிருப்பதை 200 பேர்களுக்கான அக்காமடேஷனாக உயர்த்தி, அதற்கு ஏற்ற அளவில் கட்டிடத்தை விஸ்தரிக்க, மற்ற வசதிகளையெல்லாம் செய்ய அரசு திட்டமிட்டிருக்கிறது. அப்போது, மாண்புமிகு உறுப்பினர் என்னுகின்ற எண்ணம் ஈடேறும்.

வேடசந்தூர் பேரூராட்சிப் பகுதிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம்.

*** வினா எண் 896.—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் பேரூராட்சிப் பகுதிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் குடகனாற்றில் கிணறுகள் அமைத்து பேரூராட்சியின் எல்லா கிராமங்களுக்கும் தண்ணீர் வழங்கும் திட்டம் உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (ஆ) வேடசந்தூர் பேரூராட்சிப் பகுதிக்கு பாதுகாக்கப்பட்ட குடி நீர் வழங்கும் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசிலனையில் உள்ளது.

(ஆ) இல்லை.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில அந்த நகரிலே ஆழப்படுத்தப்பட்ட துளைக் கிணறுகள் இரண்டே இரண்டு கிணறுகள் இருக்கின்றன. அவைகளில் உப்புத் தண்ணீராக இருப்பதால், முன்பு இதுபற்றி கேள்வி கேட்கப்பட்டபோது, நிதி உதவி பெற்று, இந்தப் பணி தொடங்கப்படும் என்று எழுத்து மூலமாகப் பதிலளிக்கப்பட்டுள்ளது. ஆகவே, இந்தத் திட்டத்தை நிறைவேற்றி, வேடசந்தூர் பகுதிக்கு, குடகனாற்றில் ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து, தண்ணீர் அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய கேள்வியில் வேடசந்தூர் பேரூராட்சிப் பகுதிக்கு பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் வழங்கும் திட்டம் உண்டா என்பதுதான்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அதற்கு பரிசீலனையில் இருக்கிறது என்று பதில் சொன்னேன். நீங்கள் உடனடியாக குடகனாற்றிலிருந்து வழங்கப்படுமா என்று கேட்கிறீர்கள். அங்குள்ள மக்களின் தேவையைக் கருத்தில் கொண்டு, கருப்பத் தேவனூர், மற்றும் கோசவப்பட்டி பகுதிகளில் உள்ள இரண்டு ஆழ் துளைக் கிணறுகள் மூலமும், மற்றும் நூர்சாகிப் பகுதியில் உள்ள ஒரு திறந்த கிணறு மூலமும் குடி தண்ணீர் தருவதற்கு ஏற்பாடு செய்யப்பட இருக்கிறது. நடுக்கட்ட தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் மற்றும் ஓர் ஆழ் துளைக் கிணறு பின்னர் தோண்டப்படும். ஆகவே, குடிதண்ணீருக்குத் தேவையான கிணறுகள் ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றன.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குடகனாற்றில் இல்லை என்று சொல்கிறார்கள். அந்த நகரில் இருக்கக்கூடிய 4 கிணறுகளில் உள்ள தண்ணீர் உப்புத் தண்ணீராக இருக்கிறது. குடகனாற்றில் நல்ல தண்ணீர் கிடைக்கும் என்ற கருத்து இருக்கிறது. ஆகவே, இந்த பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் திட்டத்தை அமைக்கும்போது, அதற்குத் தேவையான ஆழ் கிணறுகளை இந்த குடகனாற்றில் தோண்டி, தண்ணீர் தருவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது வல்லுநர்களுடைய கருத்தின் பிரகாரம் செயல்படுத்தப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பீடித் தொழிலாளர்களுக்கு வேலையின்மை நாட்களுக்கான ஊதியம் வழங்கும் திட்டம்.

*வினா எண் 897.—திரு. கே. ஆர். சுந்தரம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பீடித் தொழிலாளர்களுக்கு வேலையின்மை நாட்களுக்கான ஊதியம் (Fall Back wages) தரும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போதிருந்து அமுலாக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(ஆ) பீடி சுற்றும் தொழிலாளர்களுக்கு "ஃபால் பேக் வேஜஸ்" (Fall back wages) குறைந்தபட்ச ஊதியத்தில் 50 சதவிகிதம் என நிர்ணயம் செய்து அரசு 6—10—1980ம் நாளிட்ட ஆணை எண் 2337-ல்